சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>பு.சா. 01 திரு. சங்கர் த /பெ திரு. மாணிக்கம் , வயது . 57</u>

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .–**</u>

1. நான் தாக்கல் செய்துள்ள சத்யபிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் நான் தெரிவித்ததன் பெயரில் தான் அந்த ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் வருடத்திற்கு ரூபாய் 15 லட்சம் வருமானம் ஈட்டி வருகிறேன். வருடத்திற்கு சுமார் ஐந்து முதல் ஏழு லட்சம் எனக்கு செலவாகும். செலவு போக மீதமுள்ள பணத்தை என் சேமிப்பு பணமாக எடுத்துக் கொள்ளலாம் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்துகிறேன் என்றால் இல்லை. எனக்கும் எதிர்க்கும் எவ்வாறு பழக்கம் என்றால் அவரின் பக்கத்து நிலத்துக்காரர் மற்றும் அவர் என் நண்பர் ஆவர். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எனக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. நான் விவசாயம் செய்வது தவிர சீட்டு நடத்துவது மற்றும் வட்டிக்கு பணம் கொடுப்பது போன்ற தொழில் செய்கிறேனா என்றால் இல்லை டிராக்டர் மட்டும் ஓட்டுவேன். எதிரிக்கு உடம்பு சரியில்லை என்றும் மேலும் தன் கம்பெனிக்கு கடன் இருப்பதாகவும் தெரிவித்து என்னிடம் ரூபாய் 5 லட்சம் பணம் கேட்டார். அந்த விவரத்தை எனது புகாரிலும் சத்தியபிரமான வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளேன். மூன்று மாதத்தில் பணத்தை திருப்பித் தருவதாக எதிரி என்னிடம் கூறினார்.

2. மூன்று மாதம் கழித்து நான் எதிரியை நாடி பணம் கேட்டேனா என்றால் கேட்டேன். ஆனால் அவர் காலம் தாழ்த்திக் கொண்டிருந்தார். இறுதியாக எதிரி என்ன சொன்னார் என்றால் இந்த வழக்கு காசோலையை கொடுத்தார். 15.04.2023 அன்று உஜ்ஜீவன் வங்கி காசோலையை எதிரி எனக்கு அவர் வீட்டில் வைத்து கொடுத்தார். எதிரிக்கு பணம் கொடுக்கும் போது ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கிக் கொண்டேனா என்றால் இல்லை நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது யார் உடன்

இருந்தார்கள் என்றால் எதிரியின் பெரியப்பாவும் என் மாமா மகன் குமரேசனும் இருந்தார்கள். 883604 என்பது இந்த வழக்கு காசோலை எண்ணாகும். 14.9.2023 அன்று நான் கணக்கு பராமரித்து வரும் ஈக்விடாஸ் வங்கியில் காசோலையை செலுத்தினேன். என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டது என்றால் " others reasons connectivity failure" என்று குறிப்பிட்டு திருப்பப்பட்டது. காசோலை திருப்பப்பட்டதற்கான காரணத்தை கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. அதன் பின்பு நான் எதிரிக்கு போன் செய்து பார்த்தேன் ஆனால் அவர் என் போனை எடுக்கவில்லை அதன் பின்பு நான் என் வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். சட்ட அறிவிப்பு அனுப்பிய தேதி எனக்கு நினைவில்லை. ஆனால் அந்த சட்ட அறிவிப்பை எதிரி வாங்க மறுத்துவிட்டார். சட்ட அறிவிப்பை மறுத்த பின்பும் மறுநாளே சென்று எதிரியிடம் கேட்டேன் தொடர்ந்து சுமார் பத்து நாட்கள் எதிரிடம் பணத்தை கேட்டேன் என்றால் எதிரி அப்போது இல்லை ஆனால் நான் அவரிடம் பேச முயற்சி செய்தேன். மீண்டும் நான் பணத்தை கேட்ட போது எதிரி என்னிடம் 12.12.2023 அன்று காசோலை மீண்டும் செலுத்துமாறு கூறினார். அதே காசோலையை மீண்டும் செலுத்தினேனா அல்லது எதிரி வேறு காசோலை கொடுத்தாரா என்றால் அதே காசோலையில் தான் செலுத்தினேன். 12.12.2023 அன்று என் வங்கியில் காசோலையை செலுத்தினேன். அந்த காசோலையானது பேமென்ட் நிறுத்தப்பட்டுள்ளது என்று 13.12.2023 அன்று திருப்பப்பட்டது.

3. அதன் பின்பு நான் என் வழக்கறிஞரை நாடி எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன். பொதுவாக ஒரு தபால் அனுப்பினால் எத்தனை நாட்களுக்குள் சென்றுவிடும் என்றால் இரண்டு நாட்களுக்குள் சென்று விடும். என்னிடம் காட்டப்படும் சத்தியபிரமான வாக்குமூலத்தில் நாலாவது ஆவணமாக 10.10.2023 தேதியிட்ட சட்ட அறிவிப்பு குறியீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் ஐந்தாவது ஆவணமாக 10.10.2023 தேதியிட்ட திருப்பப்பட்ட உறை உடன் கூடிய அஞ்சல் ஐந்தாவது ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறுவது போல் எதிரி என்னிடம் பணம் பெறவில்லை என்றாலும் எதிரி என் நண்பர் என்ற முறையில் அவர் வீட்டுக்கு

செல்லும்போது அவரது காசோலை அவருக்கு தெரியாமல் எடுத்து வந்து மோசடியாக இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.1
Thirupattur.